Tamil Smaller Buddhist Catechism

Q4
N23
176945

L PUBLISHING HOUSE
MADRAS

1923

ஸ்ரீமான் C. W. லெட்பீடர் அவர்கள்

தொகுத்த

பௌத்தமத
பாலபோத வினா விடை

இஃது

அடையாற்று லைப்ரரி

மகா-ள-ள-ஸ்ரீ பி. எஸ். ராமசுப்பைய்யர் அவர்களால்

மொழிபெயர்க்கப்பெற்றது

1923

முகவுரை

1889-ஆம் வருஷத்தில் ஸ்ரீமான் C. W. லெட்பீடரவர்கள் பௌத்த பிரஹ்மஞானசபை சம்பந்தமாய் உழைத்து வந்தபோது, அவர் தொகுத்து, "பௌத்த சிசுபோதாய" என்றபெயரால் சிங்களத்தில் வெளியிட்ட பௌத்தமத வினா விடை இரு பாகங்களின் மொழிபெயர்ப்பே இதுவாம். வித்யோதய கலாசாலைத் தலைவரான பிரதான நாயக ஹிக்காடுவே ஸுமங்கல தீரா அவர்களாலும் தேவாமித்த அனுநாயகதீரா அவர்களாலும், ஆமோதிக்கப் பெற்ற இதன் முதற் பாகம் மட்டும் இருபத்தோர் பதிப்பாகி 60,000 பிரதிகளும், இரண்டாம் பாகம் மட்டும் 18 பதிப்பாகி 35,000 பிரதிகளும் வெளியேறி இருக்கின்றன. பிரஹ்மஞான சபையின் ஸ்தாபக அக்ராசனரான கர்னல் எச். எஸ். ஆல்காட் அவர்களது விரிவான "வினா விடைக்கு" முதற்படியாக இயற்றப்பெற்ற இதை, இப்போது பிரஹ்மஞான சபை உப அக்கிராசனரா யிருக்கும் ஸ்ரீமான் வி. ஜினராஜதாஸரவர்கள் தமது, "பாலி" உபாத்தியாயரும் வித்யோதயகலாசாலைத் தலைவருமான மஹாகோட நானிஸ்ஸரதீரோ அவர்களுடைய உதவியும்கொண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தமிழ் நாட்டிலுள்ள பௌத்தமத பாலர்களுக்கு இப்புத்தகம் மிக்க அவசியமானதால், அவர்கள் கற்கும் பாடசாலை

களில் இது ஒரு பாடப்புத்தகமாய் வர உத்தேசித்து, அவர் இப்போது அதைத் தமிழில பால நடையில் மொழிபெயர்க்கும்படி அனுமதி அளித்தனர். அதன் படி இம்மொழிபெயர்ப்பில் வார்த்தைக்கு வார்த்தை எழுதாமல் சொல் நயத்தையும் விடாமல் பொருள் நயத்தை மிகக் கவனித்திருப்பதோடு சிற்சில விடங்களில் "பாலி"யிலிருந்தே சொற்றொடர்களை பிரயோகித்து இருக்கிறது.

இப்புத்தகத்தில் அடங்கிய தருமநீதிகள் பௌத்த பாலருக்கேயன்றி ஏனைய மதத்தினரனைவருக்கும் பயன்படும் என நிச்சயமாய்ச் சொல்லலாம்.

B. S. இராமசுப்பையர்,
மொழிபெயர்த்தோன்.

பௌத்தமத பாலபோத வினவிடை

நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ ஸம்மா
ஸம்புத்தஸ்ஸ

"ஞானபரிபூர்ண, பரிசுத்தமூர்த்தியான பகவான்
'புத்தருக்கு நமஸ்காரம்'"

முதல் பாகம்

புத்தருடைய சரித்திரம்

---

1. வினா :—உன் மதம் என்ன ?
விடை :—பௌத்த மதம்.

2. வினா :—பௌத்தன் என்பவன் எவன் ?
விடை :—புத்தபகவான் உபதேசித்த தர்மங்களைப் பின்பற்றி நடக்கிறவன் பௌத்தன்.

3. வினா :—புத்தபகவான் என்பவர் யார் ?
விடை :—பல ஜன்மங்களில் நிர்வாண நிலையை நாடிக்கடைசிப் பிறப்பில் தம் ஊக்கத்தாலும் ஞானத்தாலும் அந்தப் பதவியை அடைந்த ஸர்வக்ஞரான பகவானே அவர்.

4. வினா :—புத்தபதவியை அடைந்ததற்கு முன் அவருக்கு (பல ஜன்மங்களில்) என்ன பெயர் ?
விடை :—'போதி ஸத்வர்' என்ற பெயரால் விளங்கினர்.

5. வினு :—'போதிஸத்வர்' பலதரம் பிறந்திருக்கிருர் என்பது எந்த புஸ்தகங்களால் தெரியவருகிறது?

விடை :—ஜாதகம், புத்தவம்சம், முதலிய புஸ்தகங்களாலும் இன்னம் சில புஸ்தகங்களாலும்.

6. வினு :—அவர் தம் கடைசி ஜன்மத்தில் யாராகப்பிறந்தார்?

விடை :—அவர் ஒரு சிறந்த அரசகுமாரனுகப்பிறந்தார்.

7. வினு :—அவர் பெயர் என்ன?

விடை :—ஸித்தார்த்த கௌதமர்.

8. வினு :—அவர் தகப்பனுர் யார்?

விடை :—ஸாக்கியர்களுக்கு அரசனுன சுத்தோதனன்.

9. வினு :—அவர் தாயார் பெயர் என்ன?

விடை :—இராணி மாயாதேவி.

10. வினு :—அவர் பிறந்தது எங்கே?

விடை :—கபிலவஸ்து என்ற நகரில்.

11. வினு :—கபிலவஸ்து எங்கே உள்ளது?

விடை :—இந்தியாவில் மத்தியதேசத்தில்*

12. வினு :—அவர் பிறந்த நாள் எது?

விடை :—வைசாக மாசம் பௌரணை தினம்.

13. வினு :—அவர் எப்போது பிறந்தார்?

விடை :—சுமார் 2500 வருஷங்களுக்குமுன்.

---

* கபிலவஸ்து என்ற நகர் காசிக்கு 130 மைல் நேர் வடக்கே ரோஹிணியாற்றின் கரையில் இருந்த ஒரு பட்டணம். பூகோள சாஸ்திரப்படி பூமத்திய ரேகைக்கு 27·30° டிகிரி வடக்கேயும் 83·11° டிகிரி கிழக்கேயுமாக இது அமைந்திருந்ததாம்.

14. வினு :—அவர் எவ்விதமான அரண்மனைகளில் வசித்தார்?

விடை :—நீருருவிகளோடும் ஏரிகளோடும் கூடித்தோகை விரித்தாடும் மயில்கள் நிறைந்த அழகிய உய்யான வனங்களுக்கு மத்தியில் இன்பகரமான மாளிகைகளில் வசித்துவந்தார்.

15. வினு :—அவர் தனவானே?

விடை :—அவருக்கு குதிரைகள், யானைகள், உடுக்க அழகிய பட்டாடைகள், பீதாம்பரங்கள்—இன்னும் வேண்டிய யாவும் குறைவின்றி இருந்தன.

16. வினு :—அவருக்கு விவாகமுண்டா?

விடை :—ஆம். கட்டழகியான இராஜகுமாரி யசோதரையை மணந்தார். அவர்களுக்கு ராஹுலன் என்ற ஒரு பிள்ளையும் உண்டு.

17. வினு :—இந்த வைபவத்தில் இருந்தும் அவர் சந்தோஷமாய் இருந்தாரா?

விடை :—இல்லை. அவர் அடிக்கடி விசனமுற்றிருப்பதுண்டு.

18. வினு :—அவர் ஏன் விசனமுற்று இருந்தார்?

விடை :—இவ்வுலகத்தில் தீயவர்களும் பல விதத்தால் துக்கப்படுகிறவர்களும் நிறைந்திருப்பதைக் கண்டு கருணையால் அவர் வாடி வருந்தினர்.

19. வினு :—அவருக்கு உலகத்தாரிடத்தில் உண்டான உருக்கத்தால் அவர் செய்தது என்ன?

விடை :—ஆனந்தகரமான அரண்மனைகளையும் ஆடைகளையும் செல்வத்தையும் விட்டு காட்டுக்குச் சென்றார்.

20. வி௵ :—அவர் ஏன் இப்படிச் செய்தார் ?

விடை :—துக்கத்தின் உற்பத்திக்குக் காரணத்தை ஆராய்ந்து அறியவேண்டு மென்றேயாம்.

21. வி௵ :—அவர் அதை கண்டறிந்தாரா ?

விடை :—ஆம், ஆறுவருஷம் கஷ்டப்பட்டுக் கடுந்தவம் செய்தபிறகு கண்டறிந்தார்.

22. வி௵ :—அவர் அதைக் கண்டறிந்தது எவ் விடத்தில் ?

விடை :—இக்காலத்தில் 'புத்தகயா' என்று சொல்லப்படும் ஊரில் ஒருபோதி (அரச) விருக்ஷத்தின் அடியில்.

23. வி௵ :—இவ்விடத்தில் அவர் பெற்ற பதவிக்கு என்ன பெயர் ?

விடை :—புத்தர் என்பதேயாம்.

24. வி௵ :—புத்தர் என்ற சொல்லுக்கு அர்த்தம் என்ன ?

விடை :—போதம் பெற்றவர் அதாவது "எல்லாம் தெரிந்தவர்" என்று பொருள்.

25. வி௵ :—அவர் 'புத்த'ரான பிறகு எத்தனை வருஷங்கள் தம் மதத்தை உபதேசித்து வந்தார் ?

விடை :—நாற்பத்தைந்து வருஷகாலம்.

26. வி௵ :—அவர் மதத்தை முதல் முதல் ஏற்றுக் கொண்ட சிஷர்கள் யார் யார் ?

விடை :—கொண்டஞ்ஞ, பஹட்டியா, வப்பா, மஹாநாமா, அஸ்ஸஜி.

27. வி௵ :—அவர் எங்கே வீற்றிருந்து பரிநிர் வாண பதவியை அடைந்தார் ?

விடை :—'குசிஞரா' என்ற நகரத்தில் 'மல்லா' என்ற இளவரசனுடைய சால புஷ்ப வனத்தில்.

28. வினு :—துக்கத்தின் காரணத்தை ஆராய்ந்து கண்டு நமக்குச் சொன்ன அவரிடம் நாம் அன்பு செலுத்தவேண்டாமா?

விடை :—ஆம், நாம் முழுமனத்தோடும் அவரை நேசித்துப் பூசிக்கவேண்டும்.

29. வினு :—அவருக்கு நம் அன்பைக்காட்ட உத்தமமான வழி எது?

விடை :—அவர் உபதேசித்த கொள்கைகளை அநுசரிப்பதினுலே.

மதம்

30. வினு :—த்ரிசரணங்களின் முறையையும் பஞ்சசீல முறையையும் செப்புதற்கு முன் நாம் சொல்ல வேண்டியதென்ன?

விடை :—"நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ ஸம்மா ஸம்புத்தஸ்ஸ" என்பதாம்.

31. வினு :—அதன் அர்த்தம் என்ன?

விடை :—"ஞானபரிபூரண பரிசுத்த மூர்த்தியான பகவான் புத்தருக்கு நமஸ்காரம்."

32. வினு :—இதன் பிறகு *குருக்கள் என்ன சொல்லுவார்?

விடை : —அவர் த்ரிசரணமுறையை மூன்று தரம் சொல்லுவார். அவருக்குப் பிறகு நாமும் மூன்றுதரம் அதைச் சொல்ல வேண்டும்.

---

*குருக்கள் = பிக்குகள்

33. வினு :—த்ரிசரணத்தில் முதலாவது என்ன?

விடை :—" புத்தம் சரணம் கச்சாமி."

34. வினு :—அதன் பொருள் என்ன?

விடை :—"புத்தரைச்சரணம் அடைகிறேன்."

35. வினு :—இரண்டாவது எது?

விடை :—" தம்மம் சரணம் கச்சாமி."

36. வினு :—அதன் பொருள் என்ன?

விடை :—ஸத்தியத்தைச் (தம்மத்தைச்) சரணம் அடைகிறேன்.

37. வினு :—மூன்ருவது எது?

விடை :—" ஸங்கம் சரணம் கச்சாமி."

38. வினு :—அதற்கு அர்த்தம் என்ன?

விடை :—ஆரியசங்கத்தைச் சரணமடைகிறேன்.

39. வினு :—" துதியம்பி" என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன?

விடை :—" இரண்டாம் முறை" என்றர்த்தம்.

40. வினு :—" ததியம்பி" என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன?

விடை :—" மூன்ரும் முறை" என்பதேயாம்.

41. வினு :—திரிசரண முறையை மூன்றுதரம் உச்சரித்ததும் அடுத்து சொல்லப்படுவது எது?

விடை :—பிறகு பஞ்ச சீலங்களைச் சொல்கிரேம்.

42. வினு :—முதலாவது சீலத்தைச்சொல்வதெப்படி?

விடை :—" பாணுதிபாதா வேரமணி சிக்கா பதம் ஸமாதியாமி."

43. வின :—இந்த சீலத்தினல் எதைச்செய்வதில்லை என்று வாக்குதத்தம் செய்கின்றாய்?

விடை :—எந்தப் பிராணியையும் கொல்வது இல்லை என்று உறுதி சொல்லுகிறேன்.

44. வின :—இரண்டாவது சீலமென்ன?

விடை :—" அதின்னுதானு வேரமணீ சிக்கா பதம் ஸமாதியாமி."

45. வின :—எக்காரியத்தைச் செய்வதில்லை என்று இச் சீலத்தால் உறுதி கூறுகிறாய்?

விடை :—எனக்கு என்று கொடுக்கப்படாத எந்த வஸ்துவையும் நான் எடுப்பதில்லை என்று வாக்களிக்கிறேன். (பிறர் பொருளைக் கவரேன்.)

46. வின :—மூன்றும் சீலமென்ன?

விடை :—காமேஸுமிச்சாசார வேரமணீ சிக்காபதம் ஸமாதியாமி.

47. வின :—எக்காரியத்தை ஒழிப்பதாக இந்த சீலத்தால் உறுதிகூறுகிறாய்?

விடை :—தேகத்தால் எழும் அக்கிரமமான காம விஷயங்களில் அழுந்துவதை ஒழிப்பதாக.

48. வின :—நான்காம் சீலம் எது?

விடை :—" முஸாவாதா வேரமணீ சிக்கா பதம் ஸமாதியாமி"

49. வின :—இந்தச் சீலத்தால் எதைச் செய்வதில்லை என்று வாக்களிக்கிறாய்?

விடை :—அற்ப விஷயத்திற்கும் கூட பொய் சொல்லமாட்டேன் என்பதாக வாக்களிக்கிறேன்.

50. வினு :—ஐந்தாவது சீலம் எது ?

விடை :—“ஸுராமேரய மஜ்ஜ-பமாதட்டானு வேரமணீ சிக்காபதம் ஸமாதியாமி.”

51. வினு :—இந்த சீலத்தால், எதைச் செய்வதில்லை என்று வாக்களிக்கிறுய் ?

விடை:—சாராயம், கள், முதலிய வெறிமயக்கத்தை உண்டாக்கும் எவ்வித வஸ்துவையும் உட்கொள்வதில்லை என்று வாக்கு உறுதிசெய்கிறேன்.

52. வினு :—ஆரிய ஸத்தியங்கள் நான்கு எவை ?

விடை :—அவை :—(i) துக்கம், (ii) துக்க உதயம், (iii) துக்கநிவாரணம் (iv) துக்க நிவாரண மார்க்கம்.

53. வினு :—துக்கத்தை உண்டாக்குகிற சிலவிஷயங்களைச் சொல்லு ?

விடை :—ஜன்மம் அல்லது பிறப்பு, ஜரை அல்லது மூப்பு, மரணம் அல்லது இறப்பு, இஷ்ட நிவர்த்தி,—நமக்குபிரியமானவைநம்மைவிட்டு ஒழிதல், —அநிஷ்ட பிராப்தி—நமக்கு பிரியமல்லாதவைநம்மை வந்து சேருதல்,—கிட்டாதவைகளை இச்சித்தல்.

54. வினு :—இத்துக்கங்களிலிருந்து நாம் எப்படித் தப்பித்துக்கொள்ளலாம் ?

விடை :—ஐம்புலன்களால் எழூம் காமம் முதலிய ஆசைகளை ஒழித்தலாலே.

55. வினு :—ஆசையை ஒழிக்காவிட்டால் உனக்கு உண்டாவது என்ன ?

விடை :—பிறப்பு திரும்பத்திரும்பப் பெற வேண்டியதுதான்.

56. வினு :—தீமையைத் தொலைத்தால் உனக்குண்டாவது என்ன?

விடை :—நிர்வாணம் பெறுதல்.

57. வினு :—நிர்வாணம் என்றால் என்ன?

விடை :—நம்மனத்திற் கெட்டாத சாந்தபதமான ஆனந்த நிலையாம்.*

58. வினு :—ஆசையை அறுத்தலால் நிர்வாணமடைவது எப்படி?

விடை :—துக்கத்தைப் போக்கக்கூடிய ஆரிய அஷ்டாங்க மார்க்கத்தின் விதிகளை ஒருவன் கைக்கொண்டு ஒழுகுவதால் நிர்வாண மடைவான்.†

59. வினு :—ஆரிய அஷ்டாங்க மார்க்கத்தின் முதல் படி என்ன?

விடை :—ஸம்யக் திருஷ்டி.

---

* உயிர் வாழ்க்கையே துக்கந்தான் என்பதை முதலில் நாம் தெளிவாய் உணரவேண்டும். இத்துக்கம் நீங்கிய நிலையில்தான் நிர்வாணம் என்பது புலப்படும். எனெனில் துக்கம் இன்மையே நிர்வாணம்; துக்கத்திற்கு மூலமான ஆசையை ஒழித்தால் நிர்வாணம் ஸித்திக்கிறது.

†நிர்வாணத்தை மூன்று விதங்களால் தெரிந்துகொள்ளலாம்.

i. பஸ்ஸக்க (பிரத்தியக்ஷ) ஸித்தி ஆரிய மார்க்கத்தின் நாலுபடிகளில் ஒன்றில் தன் சொந்த அனுபவத்தால்.

ii. அநுமேய ஸித்தி-தர்க்க விவகாரத்தாலும், விசாரணையாலும்.

iii. ஸத்தேய ஸித்தி-அநுபவித்தவர்களின் வார்த்தையை பிரமாணமாக நம்புவதால். m. n.

60. வினு:—அதன் அர்த்தம் என்ன?

விடை:—சரியான கோட்பாடு (திருஷ்டி).

61. வினு:—நாம் சரியான கோட்பாடுடையோரா யிருக்க எக்கொள்கையை மறக்கக்கூடாது?

விடை:—வினைப்பயனில் நம்பிக்கையை.

62. வினு:—வினைப்பயனில் நம்பிக்கையாவது என்ன?

விடை:—ஒவ்வொருவனும் தன் செய்கை ஒவ்வொன்றுக்கும் அது நன்மையோ தீமையோ அதற்குத் தக்கபடி பலனை அடைவான் என்பதேயாம்.

63. வினு:—தீயவர்களில் சிலர் சுகத்தையும் நல்லோர்களில் சிலர் துக்கத்தையும் அடைவதாக அடிக்கடி தோன்றுகிறதே!

விடை:—ஆம், ஆனுல் இருவருக்கும் இனி வருங்காலத்தில்தான் நியாயமான பலன் கிடைக்கும்.*

64. வினு:—ஆரிய அஷ்டாங்கமார்க்கத்தின் இரண்டாம் படி என்ன?

விடை:—**ஸம்யக் கல்பனு.**

65. வினு:—அதன் அர்த்தம் என்ன?

விடை:—சரியான சிந்தனை.

66. வினு:—சரியான சிந்தனை எப்போது உண்டாகிறது?

---

* தீயவர்கள் அநுபவிக்கும் சுகமானது அவர்களுடைய கெட்ட காரியங்களின் பலன் அல்ல, முன்னெருகாலத்தில் அவர்கள் செய்த நற்காரியங்களின் பயனும். அப்படியே நல்லோர்கள் அநுபவிக்கும் துக்கமும் அவர்கள் முன் செய்த கெட்டகாரியங்களின் பயனேயாகும்.

விடை—தீமையை யகற்றவும், எப்பிராணி யிடத்தும் இரக்கமடையவும் ஒருவன் நினைக்கும் போது அது உண்டாகிறது.

67. வினு :—அதன் மூன்ரும்படி என்ன ?

விடை :—ஸம்யக் வசன.

68. வினு :—அதன் அர்த்தம் என்ன ?

விடை :—அவதூரான பேச்சுக்களையும், வீண் பேச்சையும் ஒழித்து, எல்லோரிடத்தும் பிரியமாயும் மரியாதையாயும் எப்போதும் உண்மையையே பேசுவது ஸம்யக் வசன அல்லது சரியான பேச்சாம்.

69. வினு :—நான்காம்படி எது ?

விடை :—ஸம்யக் கர்மாங்ட.

70. வினு :—அதன் அர்த்தம் என்ன ?

விடை :—சரியான செய்கை.

71. வினு :—சரியான செய்கையை பின்பற்றுவது எப்படி ?

விடை :—சரீரத்தால் செய்யப்படும் ஜீவஹிம்ஸை முதலிய பாபங்களைத் தவிர்ப்பதால்.

72. வினு :—ஐந்தாம்படி என்ன ?

விடை :—ஸம்யக் ஆஜீவ.

73. வினு :—அதன் அர்த்தம் என்ன ?

விடை —சரியான ஜீவனோபாயம்.

74. வினு :— சரியான ஜீவனோபாயம் என்ருல் என்ன?

விடை :—தீங்கில்லாத காரியங்களால் சம்பாதித்த பணத்தைக்கொண்டு ஜீவித்து வருவது.

75. வி௲ :—ஆரும்படி என்ன ?
விடை :—ஸம்யக் வீர்ய.

76. வி௲ :—அதன் அர்த்தம் என்ன ?
விடை :—சரியான முயற்சி.

77. வி௲ :—சரியான முயற்சி என்ருல் என்ன ?
விடை :—தீயகாரியங்களைச் சிந்தியாமல், ஒருவன் தன் சக்திகளை நற்காரியங்களிலேயே பிரயோகித்து, நல்ல விஷயங்களை அபிவிருத்தி செய்வதேயாம்.

78. வி௲ :—ஏழாம்படி என்ன ?
விடை :—ஸம்யக் ஸ்மிருதி.

79. வி௲ :—அதன் அர்த்தம் என்ன ?
விடை :—சரியான ஞாபகம்.

80. வி௲ :—சரியான ஞாபகம் என்ருல் என்ன ?
விடை :—"என் தேகம் அழியக்கூடியது" "என் தேகம் ஊத்தையும் ஆபாஸமுமானது" இவ்வாருன சிந்தனைகளை நினைப்பில் கொண்டுவருதல்.

81. வி௲ :—எட்டாம்படி என்ன ?
விடை :—ஸம்யக் ஸமாதி.

82. வி௲ :—அதன் அர்த்தம் என்ன ?
விடை :—சரியான ஏகாக்கிரசித்தம்.

83. வி௲ :—தியானிக்கத்தக்க நல்ல விஷயங்கள் எவை ?

விடை:—i. சுகதுக்கங்களின் அநித்தியத் தன்மை ; [காமாதி பாபங்களிலிருந்து விடுவிக்கும் "ஜான" தியானங்கள் ;] ii. நாம் செய்யக்கூடிய நற்காரியங்கள் ; iii. நாம் நிர்வாணம் அடைவது எப்படி ; ஆகிய இவற்றைத் தியானிப்பது நல்லது.

84. வி௫:—பகவான் புத்தருடைய உபதேசம் முழுவதையும் சுருக்கிச்சொல்லும் பாலி வசனம் எது?

விடை:—"ஸப்ப பாபஸ்ஸ அகரணம்,
குசலஸ்ஸ உபஸம்பதா,
ஸச்சித்த பரியோதபனம்,
ஏதம் புத்தாந சாஸனம்".*

85. வி௫:—அதன் அர்த்தம் என்ன?

விடை:—தீவினையகற்றல், நல்வினைபெருக்கல், சித்தம் சுத்தி செய்தல், இது தான் புத்தர்களின் உபதேசம்.

இரண்டாம் பாகம்

"தீமை செய்யாமை"

---

1. வி௫:—என்னென்ன தீவினைகளை நாம் தவிர்க்க வேண்டும்?

விடை:—அவை பத்து: சரீரத்தால் ஏற்படக் கூடியவை மூன்று, வாக்கால் நான்கு, மனத்தால் மூன்று.

2. வி௫:—சரீரத்தினால் உண்டாகும் தீமைகளெவை?

விடை:—i. கொலை செய்தல், ii. களவாடல், iii. சரீரத்தின் அக்கிரமமான காமநுகர்ச்சிகளில் அழுந்தல்.

3. வி௫:—வாக்கினால் உண்டாகும் தீமைகளெவை?

---

* [தம்மபத,—183 ஆம் வாக்கியம்.]

விடை :—i. உண்மையல்லாததைச் சொல்வது.
ii. புறஞ்சொல்லுதல்.
iii. ஆணையிடுதல்.
iv. வீண்பேச்சு, பேசுதல்.

4. வினு :—மனத்திஞல் உண்டாகும் தீமைகளெவை ?

விடை :—i. பேராசை, ii. துவேஷம், (குரோதம்) iii. தவருன கோட்பாடு.

5. வினு :—இப்பத்து தீமைகளில் இலாகிரி வஸ்துவின் உபயோகத்தைச் சேர்க்கவேண்டாமா ?

விடை :—இலாகிரிவஸ்துவின் உபயோகத்தால் சரீரத்தின் காமநுகர்ச்சிகள் ஏற்படுவதால், இது சரீரத்தால் உண்டாகும் பாபத்தில் அடங்கி இருக்கிறது.

6. வினு :—நிர்வாணமடைவதற்கு முன் நாம் தறிக்கவேண்டியனவாகவும் நமது பிறப்பிறப்பிற்குக் கரணமாயும் இருக்கிற பத்து விலங்குகள் எவை ?

விடை :—அவையாவன :—

i. ஸக்காயதிட்டி : தேகம் நான் என்ற மோக ஞானம்.
ii. விசிகிச்சா : சந்தேகம்.
iii. சீலப்பதபராமாஸா: புத்தரால் கண்டிக்கப்பட்ட விரதத்தாலும், காயக்கிலேசத்தாலும், சுத்திபெறலாமென்று நம்பும் விபரீத எண்ணம்.
iv. காமராக : இந்திரியங்களிலிருந்து உண்டாகும் காமம் முதலிய ஆசைகள்.

v. வியாபாத (அல்லது பதிக): கோபம்

vi. ரூபராக: ரூப உலகத்தில் வாழ இச்சிப்பது.

vii. அரூபராக: அரூப உலகத்தில் வசிக்க ஆசைப் படுவது.

viii. மான: கர்வம்.

ix. உத்தச்சா: மனத்தை ஒரு நிலைப்படுத்த முடியாமை.

x. அவிஜ்ஜா: அஞ்ஞானம்.

7. வினு:—தீமை விளைவிக்கும் முக்கியமான காரணங்கள் எவை?

விடை:—அவை மூன்று: உலோபம், கோபம், மோகம்.

8. வினு:—தீமையினின்று தப்புவதற்கு நாம் செய்யவேண்டிய தென்ன?

விடை:—ஆரிய அஷ்டாங்கமார்க்க அனுஷ்டானத்தால் லோபம், கோபம், அறிவீனம், ஆகிய இவைகளை வென்று வேர் அறுக்கவேண்டும்.

நன்மை பெருக்கல்

9. வினு:—நாம் செய்யவேண்டிய புண்ணிய கர்மங்கள் எவை?

விடை:—அவை பத்து:

i. தானம்.

ii. சீலங்களை அனுஷ்டித்தல்.

iii. தியானம்.

iv. நாம் செய்யும் புண்ணியங்களில் பிறரும் சேரும்படி இடங்கொடுப்பது.

v. பிறர் செய்யும் புண்ணிய காரியங்களில் சந்தோஷப்படுவது.

vi. பிறருக்குக் கைங்கரியம் செய்வது.

vii. பூஜிக்கத் தகுந்தவர்களை பூஜிப்பது.

viii. மதத்தை விளக்கி உரைப்பது.

ix. மதவியாக்கியானங்களைக் கேட்டல்.*

x. புத்தர், தர்மம், சங்கம், என்ற மூன்று இரத்தினங்களையே சரண்புகுதல்.

10. வினா:—பெற்றோர்கள் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் என்ன?

விடை:—i. தீங்கில் விழாமல் தடுப்பது.

ii. சீலங்களைக் கைப்பற்றுதல் முதலிய நன்னடக்கையில் அவர்களை நிலைபெறச்செய்தல்.

iii. கலைகளிலும் சாஸ்திரங்களிலும் அவர்களைப் பயிற்றுவித்தல்.

iv. பிள்ளைக்குச் சரியான மனைவியையும், பெண்ணுக்குச்சரியான புருஷனையும் தேடிவைத்தல்.

v. அவர்களுடைய தேவைக்கு போதுமான தனத்தை வைத்தல்.

11. வினா:—மக்கள் பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் என்ன?

---

* சிங்களத்து பிரச்னோத்தரத்தில் இவைகள் இங்கு போலல்லாமல் கிரமம் தவறிக் கூறியிருக்கிறது.

விடை :—i. தாய்தகப்பனுரைக்காப்பாற்றுவது.
ii. அவர்களுக்குரிய கடமைகளைச் செய்வது.
iii. குடும்ப கௌரவத்தை நிலை நிறுத்துவது.
iv. பெற்ருேர்களுடைய உத்தரக் கிரியைகளைச் செய்வது.

12. வினு :—மாணவர்கள் உபாத்தியாயர்களிடத்துச் செய்யவேண்டிய கடமைகள் என்னென்ன ?

விடை :— i. உபாத்தியாயரைக் கண்டதும் ஆஸனத்தை விட்டெழுந்துநிற்றல்.
ii. அவருக்கு பணிவிடைசெய்வது.
iii. அவருக்கு அடங்கி நடப்பது.
iv. அவருக்கு வேண்டியவைகளைக் கொடுத்தல்.
v. சிரத்தையோடு கற்றுக்கொள்ளுதல்.

13. வினு :—உபாத்தியாயர்கள் மாணவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் என்ன ?

விடை :—i. சிரத்தையோடு அவர்களை பழக்குவித்தல்.
ii. சாஸ்திரங்களை அவர்களுக்கு நன்ருய் போதித்தல்.
iii. வித்தியாசமில்லாமல் மாணவர்களுக்கு கலைகளைக் கற்பித்தல்.
iv. தன் சினேகிதர்களிடத்தும் மேலோர்களிடத்தும் மாணவர்களுடைய நற்குணங்களைச் சிலாகித்துப் பேசுவது.
v. அவர்களை ரக்ஷிப்பது.

14. வினு:—ஸ்திரீ புருஷர்கள் சினேகிதர்களுக்கும் மற்றவர்களுக்கும் செய்யவேண்டிய கடமைகள் என்ன?

விடை:—i. அவர்களுக்குப் பரிசுகள் அளித்தல்.
ii. அவர்களோடு பிரியமாய்ப் பேசுதல்.
iii. அவர்களுக்கு ஹிதமான காரியங்களைச் செய்தல்.
iv. அவர்களோடு வாதாடாமலிருத்தல்.

15. வினு:—மித்திரர்கள் தமக்குச் சினேகமான ஸ்திரீ புருஷர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் என்ன?

விடை:—i. அவர்கள் அநாதைகளாக இருப்பின் ரக்ஷித்தல்.
ii. இப்படிப்பட்ட காலங்களில் அவர்கள் சொத்தைக் காப்பாற்றிக் கொடுத்தல்.
iii. ஆபத்துக்கு அடைக்கலமாக இருத்தல்.
iv. கஷ்டகாலத்தில்கைவிடாதிருத்தல்.
v. அவர்களுடைய குழந்தைகளுக்கும் பந்துக்களுக்கும் உதவி செய்தல்.

16. வினு:—பௌத்தமத குருக்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகள் எவை?

விடை:—i. பிரியத்தோடு அவருக்குப் பணிவிடைகள்செய்தல்.

ii. அவருடன் பிரியமாய்ப் பேசுதல்.

iii. அவரைப் பிரியத்தோடு நினைத்தல்.

iv. அவரை உபசரிக்க எப்போதும் சித்தமாயிருத்தல்.

v. அவருக்கு ஆடை, உணவு, உபகரணம், மருந்து—இந்நான்கு வித தானஞ் செய்தல்.

17. வினா:—குருக்கள் லௌகிகனுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் யாவை?

விடை:—i. அவன் தீமையில் விழாமல் தடுத்தல்.

ii. தானத்திலும் சீலத்திலும் அவனை நிலைபெறச் செய்தல்.

iii. தர்மத்தை அவனுக்குத் தெளிவாய்ப் போதித்தல்.

iv. அவன் கற்றுக்கொண்ட தர்மத்தில் சந்தேகங்களைத் தெளிவித்தல்.

v. பேரின்பம் அடைய நேரானமார்க்கத்தைக் காட்டுதல்.

18. வினா:—ஒருவன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகள் எவை?

விடை:—i. அவளிடத்தில் மரியாதையாய்ப் பேசுதல்.

ii. அவளைக் கடிந்து பேசாதிருத்தல்.

iii. அவளுக்கு உண்மையாக நடத்தல்.

iv. தன் சொத்தை அவள் கைவசத்தில் ஒப்புவித்தல்.

v. தன் சக்திக்குத் தகுந்தமட்டில் அவளுக்கு ஆபரணங்கள் முதலியவை கொடுத்தல்.

19. வினு:—மனைவியானவள் தன் புருஷனுக்குச்செய்யவேண்டிய கடமைகள் என்ன?

விடை:—i. வீட்டு வேலையைக் கருத்தோடு செய்தல்.

ii. தன் புருஷனின்பந்துமித்திரர்களை உபசரித்தல்.

iii. புருஷனுக்கு உண்மையாக நடத்தல்.

iv. அவன் சொத்தைச் சீராய்ப்பார்த்தல்.

v. தன் காரியங்களை சாமர்த்தியமாய்ச் செய்தல்.

19 (a) வினு:—எஜமானன் வேலைக்காரர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் என்ன?

விடை:—i. அவர்கள் சக்திக்குத் தக்க வேலை கொடுத்தல்.

ii. சாப்பாடும் கூலியும் அவர்களுக்கு காலந்தவருமல் ஒழுங்காய்க் கொடுத்தல்.

iii. அவர்களுக்கு நோய் வந்தால் ஆதரித்தல்.

iv. அவர்களுக்கு விசேஷ தினங்களில் பலகாராதிகள் கொடுத்தல்.

v. தக்க சமயங்களில் அவர்களுக்குப் பரிசுகள் கொடுத்தல்.

19 (b) வினு:—ஒரு வேலைக்காரன் தன் எஜமானனுக்குச் செய்யவேண்டிய கடமைகள் என்ன?

விடை:—i. காலையில் அவருக்கு முன் எழுந்திருத்தல்.

ii. இரவில் அவருக்குப் பின் படுக்கப் போதல்.

iii. எஜமானன் கொடுப்பதை மட்டுமே வாங்கிக்கொள்ளுதல்.

iv. நன்றாய் வேலை செய்தல்

v. அவரை நல்ல எஜமானனென்று சிலாகித்துப்பேசுதல்.*

20. வினு:—மதாநுஷ்டானத்திற்கான திருநாட்களில் சரியான பௌத்தன் செய்யவேண்டிய புண்ய காரியங்கள் எவை?

விடை:—i. குருக்களுக்கும் யாசகர்களுக்கும் பிச்சையிடுவது.

ii. சீலங்களை அநுசரிப்பது.

iii. தியானம் முதலிய காரியங்களை செய்வது.

21. வினு:—அஷ்டசீலவிரதங்களை எடுத்துக்கொள்ளும் முறை எப்படி?

விடை:—முன்னமே தெரிவிக்கப்பட்டிருந்த குருவை அல்லது சிஷனைப்பார்த்து அஷ்ட சீலங்களை நமக்கு ஓதும்படி கேட்கிறோம்.

---

* 10-19b வரைக்கும் உள்ள 12 கேள்விகளில் சொல்லப்பட்ட கடமைகள் யாவும் 'ஸூத்த பிடக'த்தில் 'சிகாலவாட' என்ற உபன்னியாஸத்தில் புத்த பகவானால் விவகரிக்கப் பெற்றவைகள்.

22. வினா:—நீ கேட்பது எப்படி?

விடை:—"ஒகாஸா, கருண்யம், கத்வா, திசரணேன, சத்திம், அட்டாங்கசீலம் தேதமி, பாண்டே அஹம் பாண்டேசரணசீலம் யாசாமி, துதியம் பி...... ததியம்பி," என்று பாலியில் சொல்கிறோம்.

23. வினா:—இதன் பொருள் என்ன?

விடை:—இதன் பொருள் "ஐயா, தயை கூர்ந்து எனக்கு மூன்று இரத்தினங்களோடு எட்டு சீலங்களைத் தாருங்கள். ஐயா, மூன்று இரத்தினங்களையும் நீதி நிலையையும் அருளவேண்டுகிறேன். இரண்டாம் முறைவேண்டுகிறேன். மூன்றும் முறை வேண்டுகிறேன்.

24. வினா:—அதன்பிறகு குரு என்ன சொல்வார்?

விடை:—ஏவம் வதேஹி, என்று சொல்லுவார்.

25. வினா:—அதன் பொருள் சொல்லு?

விடை:—"இதைச் சொல்லு" என்பதாம்; இவன் வணங்கின பிறகு இவனைகுருவானவர் சரணங்களில் நிலைப் படுத்துகிறார்.

26. வினா:—மூன்று சரணங்களிலும் அவனை நிலைப் படுத்தின பிறகு, குருவானவர் ஏதாவது சொல்லுகிறாரா?

விடை:—ஆம், சில சமயங்களில் "சரணாகமனம் என்கிறார்." அதாவது: சரணம் அடைந்தாய் என்பதாம்.

27. வினா:—இதற்கு உத்தரம் என்ன?

விடை:—"ஆமா, பந்தே-ஆம் ஐயா,"

28. வினு:—இது முடிந்ததும் என்ன தொடங்குகிறது?

விடை:—அஷ்ட சீலத்தைச் சொல்லல்.

29. வினு:—அவை என்னென்ன?

விடை:—அவையாவன :—

i. பாணதி பாதா வேரமணீ சிக்கா பதம் ஸமாதியாமி.

ii. அதின் ணதாண வேரமணீ சிக்கா பதம் ஸமாதியாமி.

iii. ஆபிரஹ்மசாரியா வேரமணீ சிக்கா பதம் ஸமாதியாமி

iv. முஸாவாதா வேரமணீ சிக்கா பதம் ஸமாதியாமி.

v. ஸுரா-மேரய-மஜ்ஜா-பமாதா-ட்டாண-வேரமணீ சிக்கா பதம் ஸமாதியாமி.

vi. விகால போஜனு வேரமணீ சிக்கா பதம் ஸமாதியாமி.

vii. நச்சகீத-வாதித-விசூகதஸ்ஸன-மாலா-கந்த விலேபன - தாரண-மண்டன-விபூஷண - ட்டாண வேரமணீ சிக்காபதம் ஸமாதியாமி.

viii. உச்சாசயன மஹாசயனு வேரமணீ சிக்கா பதம் ஸமாதியாமி.*

* (இவ்வெட்டில் முதல் ஐந்தில் மூன்முவதைத் தவிர மற்றவை இவ் வினுவிடையின் முதற்பாகத்திற் சொல்லிய பஞ்ச சீலங்களாம். பஞ்ச சீலத்தில் முன்னமே மூன்முவதாகக் கூறப்பட்டதே இங்கே அதைக் காட்டிலும் திட்டமாய்க் கூறப்பட்டிருக்கிறது. ஒன்று, இரண்டு, நான்கு, ஐந்தாம் சீலங்களின் அர்த்தத்தை முதற்பாகத்தின் 43, 45, 49, 51, ஆம் வினுக்களின் விடைகளில் காண்க.)

30. வினா:—மூன்றாம் சீலத்தால் நீ தெரிந்து கொள்வதென்ன?

விடை:—அதை ஏற்றுக்கொள்ளுகிறவன் ஸ்திரீ புருஷ ஸம்ஸர்க்கத்தையே ஒழிப்பதாக வாக்களிக்கிறான்.

31. வினா:—ஆறாம் சீலத்தால் நீ தெரிந்துகொள்வது என்ன?

விடை:—இதை சொல்கிறவன் மூற்பகலில் தவிர பின் உணவு சாப்பிடுகிறதில்லை என்று வாக்களிக்கிறான்.

32. வினா:—ஏழாம் சீலத்தால் என்ன தெரிந்து கொள்கிறாய்?

விடை:—இதனால், நர்த்தனம், கீதம், வாத்தியம், மத்தளம் அடிப்பது தகாத காட்சிகளைப் பார்த்தல், புஷ்பம், கந்தம், தைலம், முதலியவைகளை உபயோகித்தல், ஆபரணங்கள் அலங்காரங்களைத் தரிப்பது—இவைகளை யெல்லாம் தவிர்ப்பதாக வாக்களிக்கிறான்.

33. வினா:—எட்டாம் சீலத்தால் நீ என்ன தெரிந்து கொள்கிறாய்?

விடை:—உயர்ந்த டாம்பீகமான ஆஸனங்களையும் படுக்கைகளையும் தவிர்ப்பதாக இதனால் வாக்களிக்கப்படுகிறது.

176945

மனத்தைச் சுத்தி செய்வது.

34. வின:—மனத்தைச் சுத்தி செய்யப் புத்த பகவான் என்ன வழி காட்டினர்?

விடை:—வேசாலீ நகரில் கூடாகார மண்டபத்தில் கூடின சங்கத்தார்க்கு அவர் எடுத்துரைத்த உபதேசத்தில் இந்த விஷயத்தின் உண்மை அடங்கி இருக்கிறது.

35. வின:—சித்த சுத்தியின் உண்மை எவைகளில் அடங்கி இருக்கிறது என்று உபதேசித்தார்?

விடை:—i. நான்கு சிரத்தையான தியானசிந்தனைகள்.

ii. நான்கு மஹா பிரயத்தனங்கள்.

iii. சித்திகளைப் பெறுதற்குரிய நான்கு படிகள்.

iv. மனத்தின் ஐந்து கரணங்கள்.

v. ஐந்து சீல பலங்கள்.

vi. திவ்விய ஞானத்திற் சேர்ப்பிக்கும் எழுவித சகாயங்கள்.

vii. ஆரிய அஷ்டாங்க மார்க்கம்.

ஆகிய இவைகளைப் பற்றியே தான் உண்மை நிகழ்கிறதென்றார்.

36. வின:—நான்கு சிரத்தையான சிந்தனைகள் எவை?

விடை :—i. காயாநுபாஸ்ஸனு ; தேகமெனும் (உதிரமாம்ஸாதி) மலக்கூட்டின் இழிவைச்சிந்தித்தல்.

ii. வேதநாநுபாஸ்ஸனு ! சிற்றின்பங்கள் யாவும்துக்கமே என்று சிந்தித்தல்.

iii. சித்தாநு பாஸ்ஸனு ! சித்தமும் நிலையில்லை யெனச் சிந்தித்தல்.

iv. தம்மாநுபாஸ்ஸனு ! எவ்வஸ்துவும் சதமல்ல என்று கருதல்.

37. வினு :—நான்கு மஹா பிரயத்னங்கள் எவை ?

விடை :—அவைகள் நான்கு முக்கிய முயற்சிகளாம்.

38. வினு :—அவைகள் எவை ?

விடை :—i. இனித் தீமை செய்யாமை.

ii. செய்த தீங்கைத் தவிர்த்தல்.

iii. முன் இல்லாத புண்ணியத்தைச் செய்தல்.

iv. ஏற்கனவே இருக்கும் புண்ணியத்தை பெருகச்செய்தல், என்பனவாம்.

39. வினு .—லோகோத்தரமான ஸித்திகளை அடைவதற்கு, உரிய நாலுபடிகள் எவை ?

விடை :—i. சாந்தித்திபாத : அடையவேண்டுமென்ற மன உறுதி.

ii. வீரியித்திபாத : நிர்வாணத்தை அனுபவித்தலுக்குரிய வீரியம்.

iii. சித்தித்திபாத: மனதை அடக்கும் தன்மை.

iv. வீமாம் சித்திபாத: விசாரணை ஆகிய இவைகளாம்.

40. வி:—மனத்தின் கரணங்களும் சீலபலங்களும் என்னென்ன?

விடை:—i. ஸத்தீந்திரியம்: திடநம்பிக்கை.

ii. வீர்யேந்திரியம்: திட வீரியம்.

iii. ஸதீந்திரியம்: திட ஞாபகம்.

iv. ஸமாதீந்திரியம்: திட தியானம்.

v. பஞ்ஞீந்திரியம்: திட ஞானம்.

இவ்வைந்தும் மனத்தின் கரணங்களாம்.

சீல பலங்க ளாவன:—

i. ஸத்தாபலம்-சிரத்தையின் பலம்.

ii. வீரியபலம்-வீரியத்தின் பலம்.

iii. ஸதிபலம்-ஞாபக பலம்.

iv. ஸமாதிபலம்-தியான பலம்.

v. பஞ்ஞாபலம்-ஞான பலம்

41. வி:—ஏழுபொஜ்ஜங்கங்கள் என்றால் என்ன?

விடை:—அரஹத் பதவியின் ஞானத்தை அறிய ஏழுவித சகாயங்களாம்.

42. வி:—அவை யாவை?

விடை:—i. ஸதி-ஸம்பொஜ்ஜங்க: ஞாபக சக்தியைப் பரிசுத்தப் படுத்தல்.

ii. வீரிய-ஸம்பொஜ்ஜங்க: வீரியத்தை அதிகப்படுத்தல்.

iii. தம்மவிஷய-ஸம் பொஜ்ஜங்க: பகுத்தறிதல்.

iv. பீதி-ஸம்பொஜ்ஜங்க : பிரீதியை சுத்தப்படுத்தல்.

v. பஸ்ஸத்தி-ஸம்பொஜ்ஜங்க : தீமைகள் தொலைந்தபடியால் சரீரத்தையும் மனத்தையும் சாந்தமாய் இறுத்துதல்.

vi. ஸமாதி-ஸம்பொஜ்ஜங்க : மனதை ஏகநிலையில் நிறுத்துதல்.

vii. உபெக்கா-ஸம்பொஜ்ஜங்க : அமைதியாய் இருத்தல்.

(அடுத்த பிரிவாகிய ஆரிய அஷ்டாங்க மார்க்கம் முதற் பாகத்தில் விவரிக்கப்பட் டிருக்கிறது).

43. வினு :—நான்கு ஆரிய மார்க்கங்கள் எவை?

விடை :—(1) சுரோதாபத்தி, (2) ஸக்ருடாகாமி, (3) அநாகாமி, (4) அர்ஹத்.

44. வினு :—சுரோதாபத்தி என்ருல் என்ன ?

விடை :—நிர்வாணம் அடைபவர் புகும் மார்க்கத்தின் முதல் படியே அது.

45. வினு :—ஆரிய மார்க்கத்தின் இந்த முதல் படியின் பலனை அடைகிறவனுக்கு என்னென்ன பந்தங்கள் நீங்கிப் போகின்றன ?

விடை :—அவைகள், ஸக்காயதிட்டி, விசிகிச்சா, சீலப்பத பராமாஸா.

(இதன்பொருள்களை II பாகம் ஆறும் வினுவின் விடைகளில் காண்க.)

46. வினா:—'ஸக்ருடாகாமி' என்பது என்ன?

விடை:—நிர்வாணத்தை அடைபவரின் ஆரிய மார்க்கத்தில் அது இரண்டாம் படியாம்.

47. வினா:—இந்த நிலையின் பலனை அடைந்து தேர்ந்தவன் உலகத்தில் மறுபடி எத்தனைதரம் பிறப்பான்?

விடை:—அவன் இவ்வுலகத்தில் மறுபடி ஒரே தரம் தான் பிறப்பான்.

(இப்படியில் நீங்கவேண்டிய பந்தங்கள் இல்லை என்பதைக் கவனிக்க).

48. வினா:—அநாகாமி என்பது என்ன?

விடை:—நிர்வாணத்தை யடையும் ஆரியமார்க்கத்தில் அது மூன்றும் படி.

49. வினா:—'அநாகாமி' என்னும் நிலையில் தவிர்ந்து போகும் பந்தங்கள் எவை?

விடை:—அவை காமராக, பதிக என்பன.

50. வினா:—அநாகாமி நிலையின் பலனை அடைந்தவன் இவ்வுலகத்தில் திரும்பப் பிறப்பானா?

விடை:—ரூப அரூப பிரம்ம லோகங்களுக்கு கீழ்ப்பட்ட காமலோகத்தின் எப்பிரிவிலும் அவன் பிறவான்.

51. வினா:—அர்ஹத் நிலை யென்பது யாது?

விடை:—நிர்வாணத்தை அடையும் ஆரிய மார்க்கத்தில் அது நான்காம் படி.

52. வினா.—அர்ஹத் படியில் இருப்பவர் அந்நிலையின் பலனை அடைந்தபோது என்னென்ன பந்தங்கள் போயின?

விடை:—ரூபராக, அரூபராக, மான, உத்தச்சா அவிஜ்ஜா என்பவை நீங்கின.

53. வினா:—அர்ஹத்தானவருடைய குண ஸ்வரூபங்கள் எத்தன்மையன?

விடை:—எல்லாத் தீமையினின்றும் அவர் விடுபட்டவர். சகல வஸ்துக்களின் அநித்திய தன்மையை அவர் முற்றும் அறிவர். அவர் எல்லாரிடத்திலும் சமமாகவே கருணை உடையவர். அவர் எல்லா உயிர்களுக்கும் கூடியமட்டும் ஆனந்தத்தையே கொடுக்க விரும்புகிறவர். அவர் மறுபிறப்பு இல்லாதவர்.

54. வினா:—தர்மத்தின் இம் முப்பத்தேழு பிரிவுகளும்* லௌகிகமா, லோகோத்தரமா?

விடை:—ஸங்கல்பம்,† பிரீதி இவைகளைத் தவிர மற்றதெல்லாம் லோகோத்தரமே. சங்கல்பமும் பிரீதியும் ஞான விசுத்தி‡யோடு சேருமாயின் லோகோத்தரமே. ஆனால் அவைகள் மற்ற ஆறுவகையான விசுத்திகளில் சேருமாகில் சில சமயம் லௌகிகமாயும் சில சமயம் லோகோத்தரமாயும் இருக்கும்.

---

* (35 வினாவைப் பார்க்க.)

† சங்கல்ப மென்பது அஷ்டாங்க மார்க்கத்தில் சீரான சிந்தனை என்று சொல்லப்படுவதேயாம். (முதல்பாகம் 65 வினாவை பார்க்க.)

‡ விசுத்தி எழுவிதம்: i. சீலம்—நடத்தை, ii. சித்தம்—எண்ணம், iii. திருஷ்டி—கோட்பாடு, iv. கங்காவிதரண—நிச்சய புத்தி, v. மாக்காமாக்கஞ் ஞான—ஞானமார்க்கம் இருக்கிறதென்னும் உறுதி, vi. பதிபாதஞான—அபிவிருத்தி vii. ஞான—மார்க்கத்தின் முதல் படிக்குரியஞானம்.

இதுதான் புத்தர்களுடைய உபதேசம்

55. வின:—இருபத்தெட்டு புத்தர்களுடைய பெயரைச் சொல்லு.

விடை :—

1. தன்ஹங்கர,	15. சுஜாதா,
2. மெதங்கர,	16. பியதஸ்ஸி,
3. சரணங்கர,	17. அத்ததஸ்ஸி,
4. திபங்கர,	18. தம்மதஸ்ஸி,
5. கொண்டஞ்ஞா,	19. ஸித்தாத்த,
6. மங்கள,	20 திஸ்ஸா,
7. சுமன,	21. புஸ்ஸா,
8. ரேவத,	22. விபஸ்ஸீ,
9. சோபித,	23. ஸிக்கி,
10. அநோமதஸ்ஸீ,	24. வெஸப்பூ,
11. பதும,	25. ககுஸந்த,
12. நாரத,	26. கோணகமன,
13. பதுமுத்தர,	27 கஸ்ஸப,
14. சுமேத,	28. கோதம.

56. வின:—அடுத்து வரவேண்டிய புத்தரின் பெயர் என்ன?

விடை :—அவர் பெயர் "கருணா மூர்த்தியான மைத்ரேயர்" (பாலியில் மெட்டேயா)

57. வின:—புத்தர்கள் எல்லோரும் ஒரே தர்மத்தைத்தான் உபதேசித்தாரா?

விடை :—புத்தர்கள் எல்லோரும் உபதேசித்த உண்மை ஒன்றே. புத்தராய் அவதரித்த பகவான்கள் எல்லோருடைய குணாதிசயங்கள் சமமே.

58. வினு:—புத்தருடைய சுசீலங்களைக் கூறும் பாலிவாக்கியங்களைச் சொல்லு ?

விடை:—"இதி'பிஸோ .பகவா அரஹம் ஸம்மா ஸம்புத்தோ விஜ்ஜாசரண ஸம்பன்னொ, ஸுக தோ லோகவிது அநுத்தரொ புரிசதம்மஸாரதி ஸத்தா தேவமநுஸ்ஸானும் புத்தொ பகவா'தி".

59. வினு:—அதை விவரித்துச் சொல்லு ?

விடை:—" இதி'பிஸோ பகவா" அவர் பகவான் " அரஹம்" ரிஷி, "ஸம்மாஸம் புத்தோ" பூரணஞானமுடையவர் "விஜ்ஜாசரண ஸம்பன்னொ" (பதினைந்து பரிசுத்த அப்பியாஸங்களில் தேர்ந்து எட்டுவிதமான) அறிவை உடைய, "ஸுகதோ" (புத்தபதவியிற் சேர்ப்பிக்கும் ஸன்மார்க்கத்தில்) வந்திருக்கிற, "லோகவிது" மூன்றுலகங்களையும் அறிகிற, "அநுத்தரொ," நிகரற்ற, "புரிஸதம்மஸாரதி," தர்மத்தினுல் மட்டும் சிட்சிக்கப்பட்ட மனிதர்களுடைய ஆசாரியன், "ஸத்தா தேவ மநுஸ்ஸானும்", தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் ஆசிரியன், "புத்தோபகவா' அவரே புத்தபகவான்.

60. வினு:—தம்மத்தின் புகழ்ச்சியை பாலியில் சொல்லு ?

விடை:—ஸ்வாக்காதொ பகவதா தம்மொ ஸந்திட்டிகொ அகாலிகொ எஹிபஸ்ஸிகொ உபநயிகொ பஸ்ஸத்தம் வெதிதப்பொ விஞ்ஞுஹி"

61. வினு:—அதை விவரி

விடை:—"ஸவாக்காதொ பகவதா தம்மொ" அதுவேபுத்தரால் முற்றும் விவரிக்கப்பெற்ற உண்மை,

"ஸந்திட்டிகொ" பலன்களை அப்போதே விளைவிக்கிற, "அகாலிகொ" காலதாமஸம் இல்லாமல் பலன் கொடுக்கிற "எஹிபஸ்ஸிகோ" வருகிறவர்களை யெல்லாம் அழைக்கிற, "உபநயிகொ," நிர்வாணத்தில் சேர்ப்பிக்கிற, "பஸ்ஸத்தம் வேதிதப்போ விஞ்ஞுஹி" ஞானிகள் தாங்களே அறிந்துகொள்ளவேண்டிய.

62. வினு:—ஆரியர்களுடைய சங்கத்தைப் பற்றிய தோத்திரத்தைப் பாலியில் சொல்லு?

விடை:—ஸுபதிபன் ஞெ பகவதோ சாவகசங்கொ உஜுபதி பன்ஞெ பகவதொ சாவகசங்கொ, ஞாயபதி பன்ஞெ பகவதொ சாவகசங்கொ, ஸாமீஸிபதிபன்ஞெ பகவதொ சாவகசங்கொ, யதிதம் ஸட்டாரி புரிஸயுகானி அத்த புரிஸ புக்கலா ஏசபகவதொ சாவகசங்கொ, ஆஹுநேய்யொ பாஹுநேய்யொ, தக்கிணேய்யொ, அஞ்சலி கரணேய்யொ அநுத்தரம் புண்யக் கேத்தம் லோகஸ்ஸாதி.

63. வினு:—அதை விவரித்துச் சொல்?

விடை:—"ஏசபகவதொ ஸாவகசங்கொ" அது புத்தருடைய சீஷர்களின் சங்கம், "ஸுப்பதி பன்ஞெ" பரிசுத்தமாய் வாழ்கிற, "உஜுபதி பன்ஞெ" நேர்மையாய் நடக்கிற, "ஞாயபதி பன்ஞெ" ஞான மார்க்கத்தை அநுசரிக்கிற, "சாமீசி பதிபன்ஞெ" தங்கள் கடமைகளைத் (தவருமல்) நிறைவேற்றி வாழ்ந்துவருகிற, "யதிதம் சட்டாரி புரிசயுகானி அத்தபுரிச புக்கலா" நான்கு இணைகளாய் உள்ள எட்டுவித ஆரியர்களாகிய, "அஹுநேய்யொ" காணிக்கை பெறத்தகுந்த, "பாஹுநேய்யொ" உப

சரிக்கத்தகுந்த, " தக்கிணேய்யோ " தானங்கள் பெறத் தகுந்த " அஞ்ஜலிகரணேய்யோ " கைகூப்பி வணங் கத்தகுந்த, " அநுத்தரம் புண்யக்கேத்தம் லோகஸ் ஸா " ஜனங்கள் புண்யம் செய்வதற்கு உயர்ந்த பாத்ர ஸ்தானமான.

64. வினு:—த்ரி ரத்தினங்களை பூஜ்யதையாகக் கொண்டாடுவது எப்படி?

விடை:—புத்தர், தம்மம், சங்கம், என்னும் மூன்று இரத்தினங்களையும் எப்போதும் நம் சிந்தனையி லிருத்தி அவைகளை முழு மனத்தோடு பத்திபாராட்டி ஆராதிக்கவேண்டும்.

முற்றிற்று.

ஸுத்த பிடகத்தில் விமான வத்துவில் சட்ட மாணவக விமானத்திலிருந்து மூன்று:—

பாடல்கள்.

1. யோவததம் பவரோ மநுஜேஸு,
சாக்கியமுனீ பகவா கடகிஸ்ஸோ,
பாரகதொபல வீரிய ஸமங்கீ,
தம்ஸுகதம் சரணத்தம் உபேமி.

2. ராக விராகம் அநிஜம் அசோகம்,
தம்மம் அசங்கடம் அப்பதி கூலம்,
மதுரம் இமம் பகுணம் ஸுவிபத்தம்,
தம்மம் இமம் சரணத்தம் உபேமி.

3. யத்தச தின்னம் மஹப்பலம் ஆஹு
சதுஸு சுசீஸு புரிசயுகேஸு
அத்தச புக்கல தம்மதசாதே
சங்கம் இமம் சரணத்தம் உபேமி.

பொருள்.

1. சாக்கியர்களுக்குள் முனியாகிய புத்த பகவான் மனித வர்க்கத்தினுள் சிறந்த ஆசாரியன். அவர் செய்யவேண்டியதைச் செய்து (நிர்வாண மெனும் அக்கரைக்குக்) கடந்து சென்றிருக்கிறார். அவர் பலமும் சக்தியும் நிறைந்தவர். அந்த பகவானை நான் சரணம் அடைகிறேன்.

2. ஸத்தியம் நிராகாரமானது. காமக் குரோதத்தினின்றும் துக்கத்தினின்றும் விடுவிக்கும். அது களங்கமற்றது, மதுரமானது, தெளிவானது, நியாயத்தை யநுசரித்தது. இந்த தர்மத்தை நான் சரணம் அடைகிறேன்.

3. தர்மத்தை யறிந்தவர்களாய் நான்கு மேலான படிகளில் இணையாய் வீற்றிருக்கும், எட்டுவித ஆரியர்களுக்கு எது கொடுத்தாலும் மஹத்தான பலனைத் தருகிறது. இந்த ஆரியர்களின் சங்கத்தை நான் சரணம் அடைகிறேன்

PRINTED AT THE
BESANT PRESS,
MADRAS

SOME VALUABLE BOOKS ON BUDDHISM

By Dr. Annie Besant

		Rs.	A.
1. FOUR GREAT RELIGIONS. Four lectures delivered on the Twenty-first Anniversary of the Theosophical Society, Adyar. Contents: Hinduism; Zoroastrianism; Buddhism; and Christianity	...	0	8
2. THE UNIVERSAL TEXT-BOOK OF RELIGION AND MORALS. Part I: Religion. Cloth ... 1 4	Paper ...	0	14
3. Part II: Ethics. Cloth ... 1 0	Paper ...	0	12
4. BUDDHIST POPULAR LECTURES. A series of eight popular and eloquent lectures on Buddhist topics delivered in 1907 in Ceylon	Boards ...	0	8
	Cloth ...	1	0

By Bhikkhu Silacara

1. THE FOUR NOBLE TRUTHS	Paper ...	0	9
2. THE NOBLE EIGHTFOLD PATH	" ...	1	2
3. PANCHA SILA. THE FIVE PRECEPTS	" ...	0	12
4. LOTUS BLOSSOMS. Selected passages from the great Buddhist Scriptures	...	0	14

By Henry S. Olcott.

1. THE BUDDHIST CATECHISM. A very popular book of unique value and utility	Boards ...	0	8
2. THE BUDDHIST REVIVAL IN JAPAN IN 1889. With the fundamental Buddhist Beliefs of the Northern and Southern Churches	...	0	3
3. THE LIFE OF BUDDHA AND ITS LESSONS Adyar Pamphlets Series	...	0	2
4. THE GOLDEN RULES OF BUDDHISM. Compiled from the Bana Books	...	0	2

ORDER NOW FROM

THEOSOPHICAL PUBLISHING HOUSE,

ADYAR, MADRAS

SOME VALUABLE BOOKS ON BUDDHISM

		Rs.	A.
2. THE BUDDHA'S PATH OF VIRTUE. Asian Library Series	...	1	8
By Dr. F. Otto Schrader.			
1. BUDDHISM. Adyar Pamphlets series	...	0	2
By D. J. Subasinha			
1. BUDDHIST RULES FOR THE LAITY. A Translation of the Sigalowada and Vyaggapajja Suttas	...	0	6

அடையார் பிரஹ்மஞான ஸங்கட புஸ்தகசாலையில் விற்கப்படும்.

தமிழ் புஸ்தகங்கள்.

ஸ்ரீமான் C. W. லெட்பீடர் அவர்களால்

விலை		ரூ.	அ.	ப.
ரிஷிகள் அல்லது மஹாத்மாக்கள்	...	0	3	0
ப்ரஹ்மஞான விசாரத்தால் நமக்குறும் பயன் யாது?	... ...	0	9	0
என்குருநாதன் என்னை ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது?	... ...	0	3	0

ஸ்ரீமான் C. ஜீனராஜதாஸா அவர்களால்

எனது பிரதிக்ஞை	... ...	0	12	0

ஸ்ரீமான் H. S. ஆல்காட் அவர்களால்

பௌத்ததர்ம கருக்க வினாவிடை	...	0	4	0
இந்து தேசத்தின் சென்றகாலம், நிகழ் காலம் வருங்காலங்களின் நிலைமைகள்		0	2	0

ORDER NOW FROM

THEOSOPHICAL PUBLISHING HOUSE

ADYAR, MADRAS